**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை – 2017**

---

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு 2002 இன் 34ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகரசபை சட்டத்தின் 14 (4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களானவை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையை அத் திகியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பெறுமதி கூட்டிய வரியின் பெறுமதி ரூபா 117.46 மில்லின் தொகையாக இருந்தது. அம்மீதி கடந்த ஆண்டில் காணப்பட்ட ரூபா 59.50 மில்லியன் உடன் இணக்கஞ் செய்த போது ரூபா 57.97 மில்லியன் இனால் அதாவது 97 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. நிறுவனத்தின் முடிவுற்ற வரி போதியளவு காணப்பட்டமையால் இந்த பெறுமதி நீண்ட காலமாக சேகரமாகி இருந்து வந்துள்ளது என அவதானிக்கப்பட்டது. இந்த பணத்தை அறவீடு செய்வது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்ட போதிலும் இதுவரை இறுதி தீர்மானமொன்று அனுகி இருக்கவில்லை. இதன் காரணமாக அப்பணத்தை அறவீடு செய்தல் நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகார சபையினால் மீளளிப்பு செய்யும் அடிப்படை மட்டக்களப்பு விமான நிலையம் நிர்மாணிக்கும் அலுவல்களுக்காக 2016 ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 18.97 மில்லியன் தொகை போக்குவர்த்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சிலிருந்து 2017 ஆண்டு இறுதியளவிலும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களும் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2015 மே 25 திகதி பிஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 4.2 | அரச நிறுவனங்களுக்கு பொதுப் போக்குவர்த்து வசதிகள் வழங்கப்படக் கூடிய உச்ச எல்லை வருவதற்கும் போவதற்கும் 100 கீ.மி தூரமாகும் எனினும் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தை கட்டுநாயகவில் நிறுவி இருந்தமையால் அதன் பதவியனியினருக்கு சேவைக்கு வருவதற்காக தொடங்கொட முதல் கட்டுநாயக வரை பஸ் வண்டி ஒன்றிற்காக நாளாந்தம் ரூபா 16,800 தொகை செலுத்தும் அடிப்படை வருவதற்கும் போவதற்கும் 188 கி.மி தூரம் பிரயாணம் செய்வதற்காக பஸ் வண்டி ஒன்று ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2016 ஜனவரி 01 ஆம் திகதி 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரிவு 6 | அதிகார சபையின் கீழுள்ள வாகனங்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை வழங்குவதற்கும், வழங்கிய பின்னர் அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் படிவத்தின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டு இறுதியின் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் முகாமைத்துவ சேவை கணக்காய்வு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமெனினும் அதிகார சபையினால் 2017 ஆண்டின் போது அவ் அறிக்கை சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) | 2008 மே 22 ஆம் திகதி 1550/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 8 ஆம் பிரிவு | அதிகார சபை சேகரிக்கும் வெளிநாட்டு விற்பனை மிகைவதிப்பு திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக நடைமுறை ஒன்று மீளாய்வாண்டு இறுதிவரை தயாரித்திருக்கவில்லை. 2017 ஆண்டின் போது இவ்வாறு அதிகார சபையின் கணக்கிற்கு சேகரித்திருந்த வெளிநாட்டு விற்பனவு மிகை விதிப்பு ரூபா 1,525.63 மில்லியன் தொகையாகும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 21 திகதி 2050/38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | விமான சேவை வழங்கும் நிறுவனத்தினால் தற்போது பயன்படுத்தும் கட்டுநாயக விமான நிலையம் , இரத்மலான விமான நிலையம் மற்றும் 07 இடங்கள் தொடர்பான விண்வெளி வசதிகள் மற்றும் இணைந்த காணி சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 88 இன் பிரகாரம் அதிகார சபையினால் தீர்மானிக்கும் நிபந்தனைகளின் மீது மீண்டும் இந்த காணிகள் விமான சேவைகள் வழங்கும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டுமெனினும் அவ் அலுவல்கள் 2018 ஏப்ரல் 30 திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,042.91 மில்லியன் இற்கான இலாபம் ஒன்றாகக் காணப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 881.14 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 161.77 மில்லியன் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செயற்பாட்டு வருமானம் ரூபா 304.31 மில்லியன் அதாவது 20 சதவீதத்தினாலும், செயற்பாடுகள் அல்லாத வருமானம் ரூபா 29.02 இனால் அதாவது 18 சதவீத்தினால் வளர்ச்சி அடைதல் காரணமாயுள்ளது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் செயற்பாட்டு இலாபம், ஊழியர் ஊதியம், பல்வேறு வகையான வரிகள் ஆக தேசிய பொருளதாரத்திற்கு கூட்டிய பெறுமதிகள் தொடர்பான பரிசோதனையின் போது 2013 ஆண்டின் போது ரூபா 1,002.81 மில்லியன் தொகையான பங்களிப்பு 2017 ஆண்டளவில் ரூபா 1,792.98 மில்லியன் வரை வளர்ச்சியடைந்திருந்தது. இதற்காக ஊழியர் ஊதியம் மற்றும் வருமான வரி செலுத்துவதில் படிப்படியாக ஏற்பட்டிருந்த அதிகரிப்பு முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் பொருண்மையான விகிதாசாரங்கள் மற்றும் சதவீதங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| புறழ்விற்கு தேறிய இலாப விகிதசாரம் (நூற்றிற்கு) | 74 | 74 | 77 | 76 | 69 |
| புறழ்விற்கு பதவியணி கிரயம்(நூற்றிற்கு) | 14 | 14 | 12 | 11 | 13 |
| நடைமுறை விகிதாசாரம் | 2.2:1 | 2.85:1 | 3:1 | 3:1 | 2.4:1 |

புறழ்விற்கு பதவியணிக் கிரயம் 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2014 இல் குறைவடைதல் ஒன்று காட்டிய போதிலும் அது 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி அளவில் படிப்படியாக அதிகரிப்பதாகவும் 2014 ஆண்டின் போது 3:1 ஆக காணப்பட்ட நடைமுறை விகிதம் 2016 ஆண்டு முதல் படிப்படியாக குறைவடைவதாகவும் அவதானிக்கப்பட்டது. சொத்துக்கள், உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புகளின் அசைவுகளை கவனம் செலுத்தும் போது 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது மொத்த சொத்துக்கள் ரூபா 1,188.06 மில்லியனினால் அதாவது 33 சதவீதத்தினால் மற்றும் உரிமை மூலதனம் ரூபா 668.14 மில்லியனினால் அதாவது 27 சதவீதத்தினால் அதிகரித்து இருந்ததுடன், மொத்த பொறுப்புகளை ரூபா 519.92 மில்லியனினால் அதாவது 45 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

அதிகார சபை 2016 முதல் 2018 வரையான 03 வருட காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் திட்டமிட்ட இலக்குகளை நெருங்குவதற்கு இயன்ற விதமாக அதிகார சபையின் செயற்பாட்டு அலுவல்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018 ஆண்டிற்கான அதிகார சபையின் அனைத்து செயற்பாட்டு விடயங்களும் அடங்கும் விதத்தில் 18 செய்பணிகள் இனங்கண்டு அதற்கு நேரொத்த பிரதான செயலாற்றுகை சுட்டிகள் (Key performance Indicators) அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அதற்கு இணங்கக் கூடிய விதமாக செயலாற்றுகையை அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

2010 ஆண்டின் போது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) வெளியிடப்பட்ட அரச உபத்திரவமின்மைக்கான பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் 191 நாடுகளில், 19 ஆவது இடத்தை பெற்றிருந்தது.

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கையில் தேசிய விமானப் போக்குவரத்து கொள்கை தயாரிப்பதற்காக அதிகார சபையினால் அமைச்சருக்கு உதவ வேண்டும் அதன் பிரகாரம் பலவருட காலத்திற்கு முன்னர் தேசிய விமானப் போக்குவரத்துச் சேவை கொள்ளை ஒன்று தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை தேசிய விமான போக்குவர்த்து கொள்கை ஒன்று காணப்படாமையால் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்க முடியாதுள்ளது என தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 4.1.3 விமானப் போக்குவரத்து பாதுகாப்பு பிரிவின் செயலாற்றுகை

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நுண் கணிப்பு (Surveillances) முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் விமான போக்குவரத்து பாதுகாப்பு (Aviation Security) பிரிவின் 2016 மற்றும் 2017 ஆண்டுகள் தொடர்பாக செய்ய வேண்டியிருந்த நுண் கணிப்பு (Surveillances) எண்ணிக்கை முறையே 47 தொகை மற்றும் 32 தொகை என வருடாந்த கணிப்பு திட்டத்தின் குறிப்பிட்டிருந்த போதிலும் உண்மையாக செயற்படுத்தியிருந்த கணிப்புகளின் எண்ணிக்கை முறையே 29 தொகை மற்றும் 18 தொகை ஆக இருந்தது.

(ii) 2017 ஆண்டின் போது விமானப் போக்குவரத்து பாதுகாப்பு கணிப்பு விடயங்கள் நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் 03 பரிசோதனை (Test) திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பரிசோதனை ஒன்றும் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்தின் பிரிவுகள் 55 மற்றும் 56 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் விமான விபத்துக்கள் மற்றும் பாரதூரமான விமான விபத்துக்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவிப்பதற்காக ஒவ்வொரு சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணை சபை ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2010 ஆண்டின் போது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) இனால் சமர்பிக்கபட்டிருந்த கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட விசாரணை சபைக்கு பதிலாக நிரந்தரமாக செயற்பட வேண்டிய ''விமான விபத்துக்கள் விசாரணை சுதந்திர அதிகார சபை'' ஒன்று நிறுவப்பட வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது எனினும் அந்த சுதந்திர அதிகார சபையை நிறுவுவதற்கு உரிய அலுவல்கள் 2017 வருட இறுதி அளவிலும் ஆரம்ப நிலையிலே காணப்பட்டது.

(ஆ) 2016 ஜுலை 01 திகதி 1973/78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிலின் பிரகாரம் மட்டகளப்பு விமான நிலையம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்தது 2017 ஆண்டின் போது அந்த விமான நிலையம் அமைந்துள்ள காணி ரூபா 495.82 மில்லியன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்ககுளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கான காணி உறுதி 2018 ஜுன் 30 திகதி வரை பெற்றிருக்கவில்லை.

(இ) மட்டகளப்பு விமான நிலையத்தில் பறக்கும் பாடசாலை ஒன்று நடாத்துவதற்கு 2017 செப்டம்பர் 21 திகதி செய்தித்தாள் அறிவித்தலின் பிரகாரம் முன் வந்திருந்த ஒரே ஒரு நிறுவனம், அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது தெரிவு செய்யப்பட்டிருந்தது அந் நிறுவனத்தினால் 2017 செப்டம்பர் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் அதிகார சபைக்கு சமர்பிக்கபட வேண்டிய வர்த்தக திட்டம் (Business plan) 2018 ஜுன் 30 திகதி வரை சமர்பித்திருக்கவில்லை.

### 4.3 செயற்பாடு தொழிற்பாடு

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) இனால் 2010 ஆண்டில் மேற்கொள்ளபட்டுள்ள அரச உபத்திரமின்மைக்கான கணக்காய்வின் போது அதிகார சபையின் ஒவ்வொரு பிரிவு தொடர்பாகவும் சரிசெய்து கொள்ளப்பட வேண்டிய 80 பலவீனங்கள் சரிசெய்து கொள்ள வேண்டும் என விதந்துரைக்கப்பட்டிருந்தது. தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அவற்றில் வான் மாலுமி சேவை பிரிவு மற்றும் விபத்து விசாரணை பிரிவு தொடர்பாக சமர்பித்திருந்த 07 பலவீனங்களில் 02 வருமாறு ஆகும்.

| | பலவீனம் | சரி செய்வதற்கான விதப்புரை மற்றும் இலக்கு நாட்கள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (i) | வலயத்தின் ஏனைய நாடுகளுடன் வான் பிரயாணம் தடைபடுதல் சொத்துக்கள் தடைபடுதல் விமானப் போக்குவரத்துச் சேவை மற்றும் தொடர்புடைய துனை சேவைகள் தொடர்பாக சந்தர்பத்திற்கு ஏற்ற திட்டமொன்று தயாரிக்காமை. | 2011 திசெம்பர் 31 திகதியில், உள்ளவாறு பலவீனங்கள் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் வலயத்தின் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையொப்பமிடல். | நாடுகளுடன் உடன்படிக்கை களுக்காக இணங்கியிருந்த போதிலும் இராஜதந்திர முறையில் உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| (ii) | வானிலை தரவுகள் வழங்கும் தரப்பினரால் தனது நிறுவனத்தில் அமைப்பு தரமான சேவை (Quality Service) நடைமுறையொன்று நிறுவியிருக்காமை. | 2011 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் தர நடைமுறை ஒன்று நிறுவுதல் | வானிலை ஆராய்ச்சி திணைக்களத்தில் உரிய நடைமுறை ஒன்று நிறுவி இருத்தல் உறுதிப் படுத்தப்படவில்லை. |

### 4.4 சர்ச்சைகுறிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்

அதிகார சபையின் ஊழியர்களுக்காக 2016 ஆண்டிற்கான ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்குதல் மாதாந்த சம்பளத்தில் அரைவாசியை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2017 அண்டின் போது மாதாந்த சம்பளத்தை அடிப்படையாக கொண்டு ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதன் பிரகரம் மீளாய்வாண்டிற்காக பணிக்கொடை ஒதுக்கக் கணக்கு ரூபா 14.30 மில்லியன் தொகையினால் மிகை கணிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6.28 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

சிவில் விமான சேவை அதிகார சபையினால் மத்தளை விமான நிலையத்தில் ரூபா 45.04 மில்லியன் செலவிடப்பட்டு 1200 சதுர அடிக்கான அலுவலகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 ஆண்டின் போது விமான நிலையத்தின் செயற்பாட்டு அலுவல்கள் குறைந்துள்ளமையால் அவ் அலுவலகம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கட்டுநாயக வில் அமைந்துள்ள புதிய அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கும் அலுவல்களின் மேற்பார்வை மற்றும் மதிஉரைக்காக ரூபா 24.40 மில்லியன் இற்கான கட்டணம் ஒன்று செலுத்தும் அடிப்படையில் பொறியியல் சேவை உசாத்துனை கம்பனி ஒன்றிற்கு சாடப்பட்டிருந்த போதும் ரூபா 250,000 இற்கான மாதாந்த கொடுப்பனவு ஒன்று செலுத்தும் அடிப்படையில் அவ் அலுவல்களுக்காக சிவில் பொறியியலாளர் ஒருவர் மற்றும் அவருக்கு உதவிக்காக அலுவலக உதவியாளர் ஒருவரும் 2016 ஜனவரி முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2018 மார்ச் வரை அவ் இருவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 8.77 மில்லியன் இற்கான செலவு சிக்கனமற்ற செலவு ஒன்று என அவதானிக்கப்பட்டது.

## 5 நிலை பேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் தனது நோக்கெல்லையின் கீழ் வருகின்ற கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருந்தனர். எவ்வாறாயினும் அதனது கருமங்களுடன் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கான திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு 2017 ஆண்டிற்கான கணக்காய்வு வேலை திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், அதிகார சபையின் பௌதீக செயலாற்றுகை தொடர்பாக போதியளவு மதிப்பாய்வு ஒன்று ஏற்படக் கூடிய விதமாக கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

### 6.2 ஒப்பந்த வேலை நிறுவாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடுநாயகவில் நிர்மானிக்கப்பட்ட அதிகார சபையின் தலைமை அலுவலகக் கட்டிடம் 2017 ஜுன் 13 ஆம் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. மேலும் இந்த அலுவல்கள் அமப/17/1019/709/041 இலக்கம் கொண்ட 2017 ஜுன் 07 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2017 செப்டம்பர் 30 திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்த்த விதமாக செப்டம்பர் 30 ஆம் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் 2018 ஜனவரி மாதத்தில் அதிகார சபை அக்கட்டத்தில் இருப்பிடமாகியுள்ளது. எவ்வாறாயினும் நிர்மாண வேலைகள் தாமதப்படுத்திய காரணத்தினால் 2017 அக்தோபர் 01 திகதி முதல் ஹுனுப்பிடியவில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் நடத்தப்பட்டு வந்த வாடகைக் கட்டிடத்திற்காக 03 மாதங்களுக்காக மேலதிகமாக செலுத்திய கட்டிட வாடகை செலவு ரூபா 14.91 மில்லியன் தொகை ஆகும்.

(ஆ) மேற்கூறிய ‘அ’ இல் குறிப்பிட்ட கடுநாயக தலைமை அலுவலக கட்டிடம் 2018 ஜனவரியில் திறக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 19 அளவில் மேலும் அடிப்படை செயற்பாடுகள் 22 இல் Flag Posts, Boards, terrace Works ஆகிய 03 விடயங்கள் ஆரம்பித்திருக்காததுடன், மேலும் 04 விடயங்கள் பூர்த்தி செய்தல் வீதம் 15 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான மட்டத்திலேயே காணப்பட்டது.

**6.3 பாதீட்டு கட்டுபாடு**

தலைமை அலுவலக கட்டிட நிர்மாண வேலைக்கான மதிப்பீட்டு கிரயம் ரூபா 803.37 மில்லியனாக காணப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 281.22 மில்லியனுக்கான நிர்மான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 522.15 மில்லியன் கிரயத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 760 மில்லியன் இதற்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆண்டின் போது ரூபா 307.94 மில்லியன் அதாவது நிதி ஏற்பாடுகளில் 40 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக கட்டிடத்தின் நிர்மான வேலைக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகைகள் இடையே ரூபா 452.06 மில்லியன் தொகை அதாவது 60 சதவீதம் மிகை ஒதுக்கம் ஒன்றும் அவதானிக்கப்பட்டது.

**7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது அதிகார சபை தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | ஒப்பந்த நிருவாகம் | நிர்மான வேலைகள் தாமதப்படல் |
| (ஆ) | பெறவேண்டிய பணம் | அறவீடு செய்தல் தாமதமடைதல் |
| (இ) | சொத்துக்கள் கட்டுபாடு | உடன்படிக்கை பொறுப்பு ஒன்றிற்கு வந்து போதலும் காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | செயலாற்றுகை | திட்டமிட்டுள்ளவாறு தெரிவு ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை |